30-5-1994

# திருமலையில் தமிழரை வெளியேற்ற முயற்சி

(திருமலை)

திருமலையில் அறுநூறு ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படவுள்ள சுதந்திர வர்த்தக வலயத்திற்கென கப்பல் துறை பகுதியிலிருந்து பெருமளவு தமிழ்க் குடும்பங்களை அரசு [illegible] திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமலை கப்பல் துறைப் பகுதியில் அமைக்கப்படவுள்ள வர்த்தக வலயத்தில் ஐம்பதினாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக

(8-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 15 இதழ் 108
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 29-5-1994


## வலிகாமம் பகுதியில்

# ‘அவ்ரோ’ நோட்டம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன், மல்லாகம், உரும்பராய் போன்ற பகுதிகளில் நேற்று மாலை பல மணி நேரம் ‘அவ்ரோ’ விமானமொன்று நோட்டமிட்டது.

இதேவேளை இராணுவ முகாம்களிலிருந்து தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களும் துப்பாக்கிச்சூடும் நடாத்தப்பட்டது.

கடந்த சில தினங்களாக யாழ். குடாவில் விமான நோட்டம் அதிகரித்திருப்பதுடன் படைமுகாம்களிலிருந்து பீரங்கித் தாக்குதல்களும் அதிகரித்துள்ளதும் தெரிந்ததே.

—[illegible]

## சுவிசைப் போன்று

# பல ஐரோப்பிய நாடுகளும் தமிழரை திருப்பி அனுப்பும்?

## ஸ்ரீலங்கா மொனிற்றர் தகவல்

(லண்டன்)

சுவிசைப் போன்று ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இலங்கைத் தமிழகதிகளை திருப்பி அனுப்புவது குறித்துப் பரிசீலனை செய்து வருவதாக லண்டனிலிருந்து வெளிவரும் ஸ்ரீலங்கா மொனிற்றர் என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் அகதிகள் சேவையினால் வெளியிடப்படும் இச் சஞ்சிகை மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழரை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவது குறித்த சுவிஸ் எடுத்த முடிவின் பின்பே ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இது குறித்து பரிசீலனைசெய்து வருகின்றன.

இதேவேளை சுவிஸிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு எடுத்த எதிர்ப்பு எழுந்துள்ளதைத் தொடர்ந்து சுவிஸின் அந்த முடிவில் தாமதம் ஏற்படுமென கூறப்படுகிறது. இ

# வட-கிழக்கு தனியாக பிரிய அரசு ஒருபோதும் அனுமதியாது

## ஜனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கை நாட்டிலிருந்து பிரிக்க ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என ஜனாதிபதி விஜேதுங்க கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் பேசுகையில்:

(7-ம் பக்கம் பார்க்க)

# இல. தமிழர் மீது தீவிர கண்காணிப்பு

(பாரிஸ்)

பிரான்ஸ், கனடா, ஜேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளில் இலங்கை தமிழர் மீது தீவிரகண்காணிப்பில் ஈடுபட்டு வருவதாக அங்குள்ள பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

மேற்படி நாடுகளில் அண்மைக்காலமாக இலங்கை தமிழரிடையே இடம்பெற்றுவரும் மோதல் சம்பவங்கள் தமது நாட்டவரிடையே பாதிப்பு எதனையும் ஏற்படுத்தி

(8-ம் பக்கம் பார்க்க)

# இரு சிப்பாய்கள் ஆனையிறவில் பலி

(மன்னார்)

ஆனையிறவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்கியதில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்று ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

நேற்று காலை ஆனையிறவு முகாமின் வடக்குப் பகுதியில் இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாக வடக்கு-கிழக்கில் பல பகுதிகளிலும் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பத்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. [illegible]

## புலிகளின் தாக்குதல்

# திடீர் அதிகரிப்பு

(கொழும்பு)

படையினர் மீது புலிகளின் திடீர் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சில தினங்களாக வடக்கு-கிழக்கில் பரவலாகப் பல பகுதிகளிலும் புலிகள் முகாம்கள் மீதும், காவலரண்கள் மீதும் ரோந்துப் படையினர் மீதும் பல தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரி

(8-ம் பக்கம் பார்க்க)

# பெருந்துறையில் அ.தி.மு.க. அமோக வெற்றிபெற்றது

## மைலாப்பூரில் முன்னணியில

(சென்னை)

தமிழகத்தில் பெருந்துறை, மைலாப்பூர் சட்டசபைகளுக்கு நடைபெற்ற இடைத் தேர்தல்களில் பெருந்துறையில் அ. தி. மு. க வெற்றி பெற்றதுடன் மைலாப்பூரில் முன்னணியில் நிற்கிறது.

பெருந்துறையில் அ. தி. மு. க. வேட்பாளர் திரு. வி. பி. பெரியசாமி 55,200 வாக்குகளையும் அவருக்கு அடுத்ததாக வை. கோபாலசாமி தலைமையிலான மறுமலர்ச்சி தி. மு. க.

(7-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு வராவிடின்

# இல. விஜயத்தை பிற்போடுக

## பாப்பரசரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க அதிஉன்னத பீடத்தின் பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வடபகுதிக்கான விஜயத்தை மேற்கொள்ள வில்லையென்றால் அவர் இலங்கைக்கான விஜயத்தைப் பின்போடவேண்டும் என வடபகுதியிலிருந்து கத்தோலிக்க குருமார்கள் பிரமுகர்கள், மக்கள் ஆகியோர் வத்திக்கானுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

# இல. தமிழருக்கு 10 வருடச் சிறை

(சென்னை)

இலங்கைத்தமிழர் ஒருவருக்கு தமிழகம் புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றம் 10 வருடம் சிறைத்தண்டனை விதித்ததுடன் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதித்துள்ளது.

ஹெரோயின் போதைவஸ்து கடத்தியதாக யாழ்ப்பாண

(8-ம் பக்கம் பார்க்க)

